# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
புரட்டாதி 22
துல்ஹஃதா பிறை 5
ஞாயிறு (8-10-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 37

விலை சதம் 60


# நில ஆக்கிரமிப்பை எதிர்த்து பிக்குவுடன் கணேஸ் மோதல்



## "குடிசைக்கு தீவைப்பதா புத்தனின் கொள்கை?"

பட்டிருப்புத்தொகுதியில் நீண்டகாலமாக தமிழர் குடியேறி விவசாயம் செய்து வரும் நிலத்தை ஆக்கிரமிக்க துப்பாக்கியுடன் படையெடுத்து வந்த புத்தபிக்குவுடன் நேருக்கு நேராக மோதி கொட்டத்தை அடக்கினார் பட்டிருப்பு பா.உ. கர்மவீரர் கணேசலிங்கம்

இச்சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:- பட்டிருப்புத் தொகுதியின் எல்லைப் புறமாக உள்ள "கேவிளியாமடு" என்னும் குடியேற்றத் திட்டத்தில் பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த காணியற்ற தமிழர்கள் குடியேறி காடுவெட்டி கடந்த பத்து ஆண்டுகளாக வேளாண்மை செய்து வந்தார்கள். இதை அரசாங்கமும் அங்கீகரித்து, அவர்கள் வேளாண்மை செய்வதற்கு அரசாங்க அதிபரால் அனுமதப் பத்திரமும் பத்தாண்டுகளுக்கு முன்பே வழங்கப்பட்டிருந்தது.


இப்படிவேளாண்மையிலீடுபட்டிருந்த தமிழர்களின் நிலங்களைப்பறிக்க திட்டமிட்ட சிங்கள ஏகாதிபத்திய விஸ்தரிப்பு வெறியர்கள் சிலர் ஒருபௌத்தபிக்குவின் தலைமையில் மேற்படி குடியேற்றத்திட்டத்தை துப்பாக்கி சகிதம் வந்து தாககினர். அங்கிருந்த தமிழர்களைப் பயமுறுத்தி விரட்டி அடித்ததுடன் அவர்களுடைய குடிசைகளுக்கு தீ வைத்து எரித்தனா.

பாதிக்கப்பட்ட தமிழர்கள் தமது நிலை பற்றி உடனடியாக பட்டிருப்பு பா.உ. திரு. பூ. கணேசலிங்கத்திடம் கண்ணீரும் கம்பலையுமாக முறையிட்டனர். திரு. கணேசலிங்கம், அவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு அரசாங்க அதிபரிடம் சென்றுமுறையிட்டார்; நீதியமைச்சர் திரு. தேவநாயகம் அவர்களின் கவனத்துக்கும்இதைக்கொண்டு வந்தார். யாரும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் திரு. கணேசலிங்கம் அவர்கள் துணிவுடன் தாமாகவே நடவடிக்கையிலிறங்கினர். ஏறாவூர் உதவி அரசாங்க அதிபரையும், பட்டிருப்புத்தொகுதி த.இ. பேரவை அமைப்பாளர் இரா. மதுரநாயகத்தையும் தனது ஜீப்பில் ஏற்றிக் கொண்டு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிக்குநேரடியாகச் சென்றார் திரு.கணேசலிங்கம்

திரு. கணேசலிங்கம் ஜீப் வண்டியில் அங்குபோய்ச் சேர்ந்ததும், அங்கிருந்த புத்தபிக்குவும் ஏனைய சிங்களக் காடையர்களும் துப்பாக்கியைத் தூக்கியபடி ஜீப்பை நோக்கி வந்தார்களாம். அப்போது திரு. கணேசலிங்கத்துக்கும் புத்தபிக்குவுக்கும் காரசாரமான உரையாடல்இடம்பெற்றது

—8-ம் பக்கம் பார்க்க




சட்டமேதை
வி. எஸ். ஏ. புள்ளநாயகம்

## காசி, மாவை பிணை மனு தாக்கல்!

மட்டக்களப்பில் அரசியலமைப்பு பகிஷ்கார நடவடிக்கைகளிலீடுபட்டதையொட்டி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் கவிஞர் காசி ஆனந்தன,மாவை சேனாதிராசா மற்றும் ஒன்பது இளைஞர்களையும் பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டத்தரணி சி. வி. விவேகானந்தன் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி திரு. வி. எஸ். ஏ. புள்ளநாயகம், சட்டத்தரணி திரு. எஸ். வி. சந்திரகாசன் ஆகியோர் மனுதாரின் சார்பில் ஆஜராகிறுர்கள்.

## சமன்ஸ் இல்லாமல் ஆஜராகிறுர்




## மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிங்களவர் வெறியாட்டம்!

### மாவை, காசி, தாக்கப்பட்டனர்?

சிறைச்சாலையிலும் தமிழனின் உயிர் ஊசலாடுகிறது; அங்கு கூடத் தமிழனுக்குப் பாதுகாப்பு இல்லை!

அண்மையில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிங்களக் கைதிகளும், சிங்கள ஜெயிலர்களுமாகச் சேர்ந்து அங்கிருந்த தமிழ்க்கைதிகளைத் தாக்கிய போது, உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனும்,மாவைசேனாதிராசாவும் மற்றேர் தமிழ் இளைஞரும் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. இதையடுத்து உடனடியாக மாவை, காசி ஆகியோரும் விளக்கமறியலில் இருந்த ஏனைய தமிழ் இளைஞர்களும் கண்டிச் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிங்கள இன வெறிபிடித்த சிங்களக்கைதிகளும சிங்கள ஜெயிலர்களுமாகத் தமிழர்களைத் தாக்கியது இதுவே முதற்தடவை அல்ல; இதற்கு முன்னரும் இப்படியான சம்பவம்நடைபெற்றும் சிறைச்சாலை நிர்வாகம் கடுமையான நடவடிக்கையெடுக்காத காரணத்தினால், மறுபடியும் இந்த சிங்கள வெறியாட்டம் நடைபெற்றுள்ளது.

அரசியலமைப்பு பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளையொட்டி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கவிஞர் காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா, பொன். வேணுதாஸ் உட்பட 11இளைஞர்களும் இந்த இனவெறிச் சம்பவங்களின்போது மட்டக்களப்பு சிறைச்சாலையிலேயேயிருந்த காரணத்தினால் அவர்கள் மீது தாக்குதல் நடை பெற்றதாகத் தெரியவருகிறது.

மாவை சேனாதிராசாவின் முதுகுமீது ஒரு பெரிய கல்

—5-ம் பக்கம் பார்க்க

## கலாபதி பிணையில் விடுதலை

சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை சம்பந்தமாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு கடந்த நான்குமாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பாலசுப்பிரமணியம் கலாபதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் ரூபா 2500சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கலாபதியை விடுதலைசெய்யக்கோரும் மனுவை சட்டத்தரணி திரு. சி.வி. விவேகானந்தன் தாக்கல் செய்திருந்தார். கலாபதியின் சார்பில் பிரபல சட்ட அறிஞர் திரு.வி.எஸ்.ஏ. புள்ளநாயகம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்வாதாடினர்.

—5-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்

## திருவாளர்-குயுக்தி

செல்வன். ர. ஸ்டென்லி,
89, கண்டி வீதி,
நில்லம்பை,
கலகா,

கே: தமிழ் ஈழம் காண்பது பற்றி தமிழ்த்தலைவர் என்ன சொல்லுகிருர்?

ப: தமிழ் ஈழப்போராட்டத்தில் தமிழ் மக்கள் பார்வையாளராக இல்லாது பங்காளராக மாற வேண்டும் என்கிருர்.

* * *

நீ. வின்சன் டி போல்,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

கே: நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருப்பதாகக்கூறும் ''அதி உத்தமர்'' எந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்துள்ளார்?

ப: அவரது சொந்தப் பிரச்சினையை; அதாவது தான் சர்வாதிகாரமும் கொண்ட ஜனதிபதியாக வேண்டும் என்று தனது மனதை அரித்துக் கொண்ட பிரச்சினையை!

கே: தொண்டமான் அரசுடன் சேர்ந்தாலும் த. வி. கூட்டணி பலம் குன்ருது—என ம. பொ. சி. கருத்து தெரிவித்துள்ளாரே?

ப: சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் ஈழத்தமிழர் பிரச்சினையை நன்கு அறிந்தவர்; தமிழினத்தின் அரசியல் சிந்தனையின் வளர்ச்சியை புரிந்தவர். அவரது கருத்து எப்போதும் சரியாகவே இருக்கும்.

* * *

த. சுப்பிரமணியம்,
கொழும்பு-6.

கே: தொண்டமான் யாழ் மாவட்ட மந்திரி பதவியை ஏற்ருல்...?

ப: பெரிய மந்திரிக்கு மாலை போடும் குட்டி மந்திரியே மாவட்டமந்திரி என்று முன்பு கூறியவர் திரு. தொண்டமான்; பால்பண்ணை மந்திரி திரு, தொண்டமானுக்குமாவட்ட மந்திரி தொண்டமான் மாலையிடும் வேடிக்கையை நாம் பார்க்கலாம்.

* * *

மு. இராமசாமி,
யாழ்ப்பாணம்.

கே: மக்கள் விடுதலை முன்னணி என்று கூறப்படும் ஜே. வி. பிக்கும் அதன் தலைவர் ரோஹண விஜயவீராவுக்கும் நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

ப: தமிழ் தேசிய இனம், தனது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து தனது சொந்த அரசை—இறைமையை — மீட்டுக்கொள்வது என்று முடிவு செய்து விட்டது. இந்த முடிவை 1977 ஆடிப் பொதுத் தேர்தலிலும் திட்டவட்டமாக அறிவித்து விட்டது. தமிழர்களுக்கு பிரிந்துசென்று தனிநாடு நிறுவக்கூடிய பூரண சுயநிர்ணய உரிமை தேவையென்பதை எந்த ஒரு தமிழனும் இன்று எதிர்க்கவில்லை. எல்லோருமே அதை ஆதரிக்கிருர்கள். இந்நிலையில் தமிழர்களுக்கு மத்தியில் சுயநிர்ணய உரிமை பற்றி ரோஹண விஜயவீரா கூட்டம் போட்டுப்பேச வேண்டிய அவசியமில்லை. தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைக்குத் தடைக்கல்லர்க — தமிழ் ஈழமக்கள் தமது இறைமையை அனுபவிக்க முடியாமல் முட்டுக்கட்டையாக — இருப்பவர்கள் சிங்களவர்களே. எனவே தமிழ்த் தேசிய இனத்தின் பிரிந்து செல்லும் உரிமை உள்ளிட்ட சுயநிர்ணய உரிமையை திரு. ரோஹண விஜயவீராவும் அவரது இயக்கமும் உளப்பூர்வமாக ஏற்ருல், அவர்கள் சிங்கள மக்களிடையே இது பற்றிய பிரசாரம் செய்து மனமாற்றத்தைக்கொண்டு வரட்டும். சிங்களமக்களிடையே தான் இதுபற்றிப்பிரசாரம்தேவை அதிலே அவர்கள் வெற்றி பெற்ருல், இரத்தம் சிந்தாமல், உயிர்ப்பலி கொடுக்காமல், அந்நிய தலையீட்டுக்கு இடமில்லாமல், இரு நாட்டினங்களும் தனித்தனியே பிரிந்து அதே சமயம் உறவுடனும் வாழலாம்.

* * *

வி. ஞானனந்தன்,
வெள்ளவத்தை,

கே: சுதந்திரனின் கருத்துக்கும் தலைவர்களின் செயலுக்குமிடையே இடைவெளி கூடிக்கொண்டே வருகின்றதே...!

ப: ஆனுல் அந்த இடைவெளிக்குள் தமிழ்ப்பகைவர்கள் நுழைய முனைந்தால் அவர்கள் பாடு ஆப்பிழுத்த குரங்கின் கதையாகத்தான் முடியும்.

* * *

இ. வருணு,
தெகிவலை.

கே: 23-7-78 அன்று காலை 10 மணியளவில் வானெலியின் சிங்கள சேவையில் முருகனைப்பற்றி ஒரு மணித்தியாலம் பாட்டும் கதையும் இடம்பெற்றது. இதில் துட்டகைமுனு என்ற சிங்கள அரசனுக்கு முருகன் அருள் கொடுத்ததாகவும் துட்டகைமுனுவே கதிர்காமத்தைக் கட்டியதாகவும் கூறப்பட்டது உண்மையா?

ப: பச்சைப்பொய். சிங்களவர் உருவாக்கிவரும் கட்டுக்கதைகளில் இதுவும் ஒன்று. கதிர்காமம் எந்தச் சிங்கள மன்னனுலும் கட்டப்பட்டதென்பதற்கு வரலாற்றுச்சான்றுகள் கிடையாது.

* * *

கே. கந்தசாமி,
யாழ்ப்பாணம்.

கே: யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற ஜாதிக விமுக்தி பெரமுனைக் கூட்டத்தில் பேசிய சகலரும் சுதந்திரனையே திட்டித்தீர்த்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: இதிலென்ன ஆச்சரியம்? காய்த்த மரம் கல்லெறிபடுகிறது!

---

● ஒக்டோபர் 8- அமரர் இராசமாணிக்கம் அவர்களின் நினைவு நாளாகும் அதையொட்டி இக்கட்டுரை இங்கு இடம் பெறுகிறது,

# கிழக்கின் பேரொளி இராசமாணிக்கம்!



நமது தமிழ்ஈழ நாட்டில் தோன்றி மறைந்தபெரியார்கள் பலர். அவர்களின் வரிசையிலே வைத்து, அரசியல் எதிரிகளாலும், போற்றிப் புகழப்பட்டவர் எங்கள் தலைமகன்இராசமாணிக்கனுர். ''தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை'' என்ற வாக்குக்கொப்ப, தமிழுக்காக— தமிழ்இனத்துக்காக— தமிழ் நிலத்துக்காக அல்லும்பகலும் அயராது உழைத்தார்.

தன் இனத்துக்காக உழைக்க உறுதி கொண்ட பெரியார் உயர்ந்த அரசாங்க உத்தியோகத்தையும் உதறியெறிந்தார். சிங்களக்குடியேற்றத்திலிருந்து, கிழக்கிலங்கையைக் காப்பாற்றப் போராடத்தொடங்கினுர். தந்தை செல்வாவின் வழியே— தமிழினத்தின் தலைமை ஏற்று அகிம்சை— சிறந்த வழியெனக் கொண்டார். தாயற்ற சேய்கள்போன்று, தமக்கு நல்வாழ்வு காட்ட, ஏற்ற தலைவனின்றி இன்னலுற்ற கிழக்கிலங்கைத் தமிழ் மக்கள் இராசமாணிக்கனுரின் தலைமையை ஏற்றனர். கிழக்கின் உதய சூரியன் இவன்தானென இறும்பூதெய்தினர்.

''சான்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்ேருன் எனக் கேட்டதாய்'' என்றமுது மொழிக்கொப்ப, சான்ேருக, தகைமைசார்ந்த தலைவனுக, தன்மானத் தமிழனுக இறுதிவரை வாழ்ந்தார். கோடி இன்னல் வந்தபோதும், கொண்ட கொள்கையில், நிலைகுலையாத் தூயோன், எனப் போற்றப்பட்டார். மனைவி மக்களைவிட, அன்னைத்தமிழேமேலெனஅதற்காக உழைத்தார். தோல்வியைக்கண்டு துவளாது—அரசியல் எதிரிகள், அவதூருன வார்த்தைகளால் தாக்கிப் பேசியபோதும் திருப்பித் தாக்காத உத்தமர். பகைவரோடும் அன்புடன் பழகும் பண்பாளர். இக்குணத்தால்தான் அவர்முன்நின்று பேச எதிரிகள் நாணிக்கோணினர்.

அஞ்சா நெஞ்சோடு, மக்கள் பிரதிநிதிகள் சபையிலும்சரி, பொது மேடைகளிலும்சரி, நேர்மையான வார்த்தைகளால், உண்மைகளை எடுத்துரைத்தார். தமிழினத்திற்கு ஏற்படுகின்ற இன்னல்களை அடுக்கடுக்காகச் சுட்டிக்காட்டினுர். தமிழ் இனத்துக்கு தமிழ் இடத்துக்கு அரசாங்கம் செய்வது அநீதி என பலமுறை பகிரங்கமாகவே எடுத்துரைத்தார். அப்படியிருந்தும் அரசாங்கத்தலைவர்களாலேயே அன்போடு ''இராசு'' என அழைக்கப்பட்ட உண்மையாளன்.

அரசியல் இலாபம் கருதி மக்களிடையே திணிக்கப்பட்ட சாதி, சமயபாகுபாடுகளை அகற்றி எல்லோரும் சமம் என்ற உயர்ந்த நோக்கத்தோடு உழைத்தார். மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னர், வவுனியா, என்றுஇடத்தின் பேரால் பிரிக்கப்பட்டுக்கிடந்த தமிழினத்தை இணைக்கும் பாலமாகப் பிரகாசித்தவர் தலைவர்மாணிக்கனுர்.

தம் அரசியல் தோழர்களோடு பழகுவதுபோல், அவரை அரசியல் எதிரியாக நினைத்தவர்களுடனும் பழகுவார். அத்தோடு பாகுபாடற்ற முறையிலும் சேவை செய்தார். ஆதரவாளர் மற்றவரைத்தாக்கிப்பேசும்போது, தடுத்து நிறுத்தி விடுவார். கடினமானவார்த்தைகள் பேசினுல் கடிந்துரைப்பார். இதனுல் அவரோடு பழகும்போது அவதானம் தேவை. அவர் உரையாடும் போது, உயரிய சிந்தனைகள் தங்குதடையின்றி ஓடிவரும். அன்னுர் இன் சொல்லாலும், சுந்தரத் தோற்றத்தாலும், பண்பாலும், பகைவரையும் அன்பு கொள்ள வைத்தஅறிவுடையோன்.

ஆகவே, பகைவரையும் பண்போடு உபசரித்த உத்தமரின் திருநாமம் தமிழினம் வாழும் மட்டும், தமிழர் நெஞ்சிலேயே நடமாடும்.

—விமலா கிருஷ்ணபிள்ளை
[illegible]

---

# சூனியமா?

கோலூர் மறைந்தாரா? கோவென்றலறுகிறேன்!
சாவூர் அடைந்தாரா? தாங்கவுடியவில்லை!
அறிவாயுதம் ஏந்தி அஞ்சாமை மேற்கொண்டு
அறியாமைப் பேயெல்லாம் அகற்றியவர் போனரா?
மூடக்கருத்தெல்லாம் முற்போக்குச் சிந்தனையால்
சாடித்தகர்த்தபெருந் தகையாளர் சென்ருரா?
மனக்கோலம் கொண்டோரின் மயக்கம் தெளிவித்து
தனக்கோர் வழிகண்ட சான்ேருர் மறைந்தாரா?
பகுத்தறிவே தெய்வமெனப் பலபேர் அறிஞர்களும்
வகுத்தநெறிப்படியே வாழ்ந்தார் மறைந்தாரா?
உளத்தின் பிணிதீர்க்கும் உயர்ந்த மருத்துவர்சாக்
களத்தில் இயமனிடம் கண்டாரா தோல்வியினை?
பொய்யர் புரட்டர்களை போலி ஆசாமிகளைக்
கையெய்யாய் மக்களுக்குக் காட்டியவர் எங்குற்ருர்?
அறிவுக்கதிர் பரப்பும் ஆதவனைய் இங்குலவி
அறியாமைக்கும் இருட்டில் அலையநாம் ஏகியதேன்?
அமரர் உலகினிலும் அறியாமை போக்குதற்குச்
சமயம் இதுவேதான் சரியென்று போனரா?
தனியாய் இருவரையில் தகர்த்த பழமைகளை
இனியாரெதிர்த்திடுவார்? எதிர்காலம் சூனியமா?

— 'தாமரைத்திவான்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீயாய் எழுகிறது தேனாடு!

## தேவநாயகம் தூக்கட்டும் திருவோடு!

**கிழக்கிலங்கை — எங்கள் தென்தமிழ்ஈழம்— சிங்கள ஏகாதிபத்தியத்தைக் கிழித்து எறிய வீறுகொண்டு நிற்கும் காட்சி எமக்கெல்லாம் கிளுகிளுப்பை ஏற்படுத்துகிறது. வடக்கு— கிழக்கு என்று ஆட்சியாளரின் அடிவருடிகள் பேசும் முடக்கு வாதங்கள் வலு இழந்து நிற்பதைக் காண விடுதலை இதயங்கள் வாழ்த்திசைத்து நிற்கின்றன.**

கிழக்கு வாழ் மக்களின் முன்னேற்றமே தனது இலட்சியம் என்று மேடைகளில் 'கிடு கிடு' முழக்கம் இடும் நீதி அமைச்சர் தேவநாயகத்தின் ஆட்சியில் கிழக்கின் அரசியல் தலைவர்கள்— இளைஞர் முன்னோடிகள்— மாணவர்கள் சிறைச்சாலைகளில் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மட்டக்களப்புத் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் கவிஞர் காசி ஆனந்தன், மூதூர் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பாளர் திரு. தங்கத்துரை, மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் பொன் வேணுதாஸ்— மற்றும் மூதூர்— மட்டக்களப்பு தொகுதிகளைச் சேர்ந்த இளைஞர் பலர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருப்பதும்!— பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருப்பதும்— திருகோணமலை மாணவர்கள் சிலர் இந்துக் கல்லூரியில் இருந்து நீக்கப்பட்டிருப்பதும் தேவநாயகம் கிழக்கை முன்னேற்றும் இலட்சணமா என்றுகேட்கத் தோன்றுகிறது.

அனைத்திலங்கை தமிழ் இளைஞர்பேரவைஅமைப்பாளர் மாவைசேனாதிராசாவும் மட்டக்களப்பு மண்ணில் அடக்குமுறை ஆட்சியாளரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

தேனாட்டில் இருந்து தேவநாயகத்தோடு இன்னொரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரையும் ஆளும் கட்சியில் சேர்த்து விட்டோம் என்று கனகரெத்தினத்தைத் தேடிப்பிடித்து ஜே. ஆரின் சிங்கள ஏகாதிபத்தியம் துள்ளிக் குதித்த காலம் மலையேறி விட்டது. கனகரெத்தினத்தின் சொந்த மகனே— நீதி அமைச்சரின் சிறைச்சாலையில் கைதியாய் அழுந்தி வாழும் வாழ்க்கை— கிழக்கின் எழுச்சிக்காவியமே ஆகும்.

1972 மே 22 இல்— முதலாவது குடியரசுநாள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மட்டக்களப்பின் வீரத்தமிழ் மாணவர்களில் ஒருவனாக பரமதேவா என்ற தமிழ் இளைஞன் இருந்தான். அப்போதிருந்த கல்லூரி நிர்வாகம் அவனைக் கல்லூரியை விட்டு வெளியேற்றியது. தொடர்ந்தும் அவன் தமிழ் ஈழ விடுதலைப் போரில் மும்முரமாக ஈடுபட்டான். ஏறாவூர் வங்கிக் கொள்ளையில் தொடர்புடையவன் என்ற சந்தேகத்தின் பேரில் கைதாகி இன்று

> **எழுஞாயிறு**

நண்பன் விஜியுடன் விளக்கமறியல் கைதியாக சிங்கள ஏகாதிபத்தியத்தின் சிறைச்சாலையில் சீரழிகிறான் மட்டுநகர் பரமதேவா.

தேனாட்டின் புகழ்மிக்க மண்டூர் முருகன் கோயிலில் கடந்த வாரம் தீர்த்தத் திருவிழா. பட்டிருப்புத்தொகுதியைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் திரு. கணேசலிங்கம் தலைமையில் பாதயாத்திரை செய்தார்கள். சாதாரண யாத்திரையா அது? இல்லை— விடுதலை யாத்திரை. பட்டிருப்புத் தொகுதியில் இப்படி ஓர் எழுச்சி யாத்திரை இது வரை நடந்ததில்லை. தமிழ் ஈழ விடுதலை உணர்ச்சி கிழக்கில் தளைத்து கிளைத்து மதாளித்து நிற்கிறது.

கல்குடா தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பாளர் சம்பந்தமூர்த்தி சிறைச்சாலையில் ஐந்து நாட்கள் விளக்கமறியல் கைதியாகஇருந்து பிணையில் வெளியே சென்றிருக்கிறார். வழக்கு ஒன்றுஅவரை வரவேற்கக்காத்திருக்கிறது. கல்குடா தொகுதி— நீதி அமைச்சரின் தாயகம்— அங்கே உணர்ச்சி அலைகள் கட்டுமீறிப் பொங்கிப் பாய்கின்றன.

புதிய குடியரசு நாளில்— கல்குடா தொகுதியில்— சித்தாண்டியில் சிங்கள ஏகாதிபத்தியத்தின் தேசியக் கொடியை இளைஞர் சிலர் தீ வைத்துச் சாம்பலாக்கினார்களாம் யார் அவர்கள்? எங்கே அவர்கள்? என்று தொடங்கிய பொலிஸ் வேட்டை இன்னும் ஓய்ந்தபாடில்லை.

22-9-1978 அன்று காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா, பொன் வேணுதாஸ், யோகேந்திரா, காந்தரூபன், லோகேஸ்வரன், ராமராஜ், யோகராஜா, பெஞ்சமின், சாந்தகுமார், மரியகூசை ஆகியோர் கைகளில் விலங்கு பூட்டப்பட்டு மட்டக்களப்பு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறார்கள். கால வரையறை இன்றி அவர்களைச் சிறைச்சாலையில்வைக்குமாறு நீதிபதி உத்தரவிடுகிறார். நீதிமன்றத்தில் திரண்டிருந்த மக்கள் கூட்டம் தேம்பி அழுகிறது. கவிஞர் காசி ஆனந்தன் அந்த மக்கள் கூட்டத்தில் ஒரு கருத்தைச் சொல்கிறார்:-

"புதிய குடியரசு நாளை பகிஷ்கரிக்குமாறு மக்களை வேண்டும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தோம்— கடைகளைப் பூட்டச்சொன்னோம் என்று கூறி இன்று எங்களைச் சிறைச்சாலையில் தள்ளியிருக்கிறார்கள். 1972 மே 22 இல் திரு. தேவநாயகம் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்தார். இதே மட்டக்களப்பில் என்னோடு ஒவ்வொருகடையாய் ஏறி— "குடியரசு நாளைப் பகிஷ்கரியுங்கள்— கடைகளைப் பூட்டுங்கள்,, என்று கேட்டு— துண்டுப்பிரசுரங்களை அன்று அவர் விநியோகித்தார். இன்று— ஆறு ஆண்டுகளுக்குப் பிறபு அவர் நீதிஅமைச்சர் ஆகிவிட்டார். அவர் அன்று செய்த அதே காரியத்தைச் செய்ததற்காக— அவருடைய நீதி நிருவாகத்தின் கீழ் இன்று நாங்கள் சிறைச்சாலை பார்க்கிறோம்.

மக்கள் கவிஞரின் பேச்சைக் கேட்டு— மௌனமாய் கண்ணீர்மல்க நிற்கிறார்கள்.

சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை ஆட்சியை வீழ்த்தி— தமிழ் ஈழத்தின் புனித விடுதலையைக் காணும்மாபெரும்போராட்டத்தில் தேனாடு— நீதி அமைச்சரின் பாஷையில் கிழக்கு— செந்தழலாய் வெம்புயலாய் இன்று மெய் சிலிர்த்து நிற்கிறது.

இராசவரோதயத்தின் திருகோணமலை முதல் அரியநாயகத்தின் திருக்கோயில் வரை பொங்கி எழும் எரிதழலை நாம் இதயமார வாழ்த்துவோம்.

வீழ்க சிங்கள ஏகாதிபத்தியம்! ஆள்க தமிழ் மானிடம்! வாழ்க தங்கமாமணித் தமிழ் ஈழம்

# சிங்கள அரசின் தலையீட்டுக்கு இடமின்றி சாதிக்கொடுமைக்கு சாவுமணியடிப்போம்!

## யாழ் இளைஞர் மாநாட்டில் இராசலிங்கம் முழக்கம்!

**"சிங்கள ஏகாதிபத்தியம் இன்று முழுத்தமிழினத்தையுமே ஏறி மிதிக்கிறது. அந்தக்கொடிய ஏகாதிபத்தியத்திலிருநது விடுதலைபெறவே நாம் இன்று போராடுகிறோம். இந்த நிலையில் சாதிக்கொடுமையை, சமூகஏற்றத்தாழ்வு எனும் தமிழ் சமுதாயத்தில் படிந்திருக்கும் அழுக்கைத் துடைப்பதற்கு, அந்நிய சிங்கள ஆட்சியின் அதிகாரங்களையும் சிங்களப் பொலீசாரையும், சட்டங்களையும் நாடாது, விடுதலையை நாடும் தமிழ் மக்கள் தாமாகவே முன்வந்து இந்தக் கொடுமையை இந்தப்பிடைமை— இந்த இழிவை— துடைத்தெறிய வேண்டும். சிங்களவன் நம் தோளிலே ஏறிச்சவாரி விடுவதை அனுமதிக்காத நாம்— நம் காலின் கீழ இன்னும் ஒரு சாராரைப் போட்டு மிதிக்கலாமா என்று தமிழன் ஒவ்வொருவனும் சிந்திக்க வேண்டும்"**



இவ்வாறு யாழ் வீரசிங்க மண்டபத்தில் 1-10-78 மாலை நடைபெற்ற சாதியொழிப்புக் கூட்டத்தில் பேசிய உடுப்பிட்டி பா. உ. திரு. த. இராசலிங்கம் எம். ஏ. அவர்கள் குறிப்பிட்டார். இக்கூட்டத்துக்கு டாக்டர் பரராசசேகரம் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் திரு. இராசலிங்கம் அவர்களுக்கு பல நூற்றுக் கணக்கான இளைஞர்கள் கழுத்துநிறைய மலர் மாலை சூட்டி நமது அன்பைத் தெரிவித்தனர். இக்கூட்டத்தில் திரு. இராசலிங்கம் பேசுகையில்மேலும் கூறியதாவது:—

"தமிழ் தேசிய இனம் இன்று சாதிமத பேதமற்ற ஒரு சமதர்மத் தமிழீழ அரசை அமைப்பதன் மூலம் தனது விடுதலையை நிலைநாட்ட உறுதிகொண்டு போராடி வருகிறது. இதே இலட்சியத்தை முன் வைத்தே கடந்த தேர்தலில் நாம் வெற்றி பெற்றோம். சிறுபான்மைத் தமிழர்களும் தமிழுணர்வில், விடுதலை உணர்வில்; இலட்சிய விசுவாசத்தில், ஏனைய தமிழர்களுக்கு கிஞ்சிற்றும் சளைத்தவர்களல்ல என்ற அடிப்படையில் அவர்களும் இந்த இன விடுதலைப்போராட்டத்தில் ஒன்றுபட்டு நிற்கிறார்கள்.

"இந்த நிலையிலும் நாட்டு விடுதலையை விரும்பும் நாம், நமது சமுதாயத்தில் பிரிக்க முடியாத ஒரு அங்கமாகவுள்ள ஒரு பிரிவினரின் உரிமைகளை மறுப்பது நியாயமாகுமா என்று தம்மை உயர்குடித்தமிழர்கள் என்றுஎண்ணிக்கொண்டிருக்கும் தமிழர்கள் தமது மனச்சாட்சியைத் தொட்டுக் கேட்க வேண்டும். நாட்டு விடுதலைக்கு முன்னால் சமூக விடுதலை நிலைநாட்டப்பட வேண்டும்.

"விடுதலையை உண்மையாக நேசிக்கும் எவனும் சாதிக்கொடுமைகளுக்கு இடமளிக்கக்கூடாது. தமிழீழம் அமைந்த பின்னால் நாம் கொடுமைப்படுத்தப்படுவோம் என்ற அச்சம் தமிழ் மக்களில் ஒரு பிரிவினருக்கு இருக்கக்கூடாது. அந்த அச்சத்தைப் போக்கும் வகையில் சாதிக்கொடுமைகளுக்கும் சமூக ஏற்ற தாழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

இன்று தேசிய அரசுப் பேரவையில் சிங்களவன் எமது தமிழ் இனத்தைப் பார்த்து கேலி பேசுகிறான்; கிண்டல் செய்கிறான். ஆனாலும், அந்த இடத்தில் நான் அவனுக்கு விட்டுக்கொடுக்காமல், தமிழினத்தின் ஒற்றுமையை கட்டிக்காத்து, கேலிபேசுவோருக்கு தகுந்த சாட்டையடி கொடுத்து வருகிறேன்.

சாதிப்பிரச்சினையும், சமூக ஏற்றத்தாழ்வு தமிழர்களின் பிரச்சினையே தவிர- முழுத்தமிழ் இனத்தின் பிரச்சினையேதவிர —ஏதோ சிறுபான்மைத் தமிழர்களின் தனிப்பட்ட பிரச்சினை அல்ல. சாதிப்பிரச்சினைக்குத் தமிழர்களே முடிவுகாணவேண்டும். சிங்கள அரசாங்கஅதிபரையும், சிங்கள அதிகாரிகளையும், சிங்கள பொலிசாரையும், சிங்கள அரசின் சட்டங்களையும் நாம் நம்பியிராது— சிங்களவன் இந்தப்பிரச்சினையில் தலையிட இடம் வைக்காது—தமிழர்களே இப் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும். சிறுபான்மை, பெரும்பான்மை என்ற வேறுபாடின்றி எல்லோரும் தமிழர்களாகவே வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். விடுதலையை உண்மையாக நேசிக்கும் தமிழனின் முதற்கடமை இதுதான்! ஆதியில் இல்லாது பாதியில் வந்த சாதிக்கொடுமைகளை மோதி மிதிப்போம்!"

சாவகச்சேரி பா. உ. வும் சாதியொழிப்புக் குழுவின் தலைவருமான திரு. வி. என். நவரத்தினம் கூறியதாவது:-

ஆவரங்காலில் நடைபெற்ற கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில், காந்தி பிறந்தநாளான அக்டோபர் 2ம் திகதிக்கு முன்பு சாதிக்கொடுமையின்

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவநாயகத்துக்குப் பகிரங்க மடல் (3)

# சந்தர்ப்பவாதியார்? பச்சோந்தி யார்? நீதியமைச்சரே திருப்பிப் பாருங்கள்!

அன்புள்ள அமைச்சர் தேவநாயகம் அவர்களுக்கு—

இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் என்று ஒரு பெரிய அறிஞர் இருந்தார். அநகாரிக தர்மபால தேரோக்கள் பற்றியென்றல் நிறைய உங்களுக்குத் தெரிந்திருக்கும்—ஆனுல் இந்த திருவள்ளுவர் என்ற அறிஞரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்களோ என்னவோ? அந்த அறிஞர் உங்களைப் போன்ற மேதாவிகள் பிற்காலத்தில் தோன்றுவார்கள் என்று கருதியோ என்னவோ பல அறிவுரைகளை அருமையான குறள் வடிவில் தந்திருக்கிருர். அதிலே ஒன்று நாநலம் பேணுவது பற்றிய அருமையான குறள்.

''யாகா வாராயினும்
நாகாக்க கா வாக்காற்
சோகாப்பர் சொல்
இழுக்குப்பட்டு''

என்பது அந்த மணியான அறிவுரை: இந்த அறிவுரையைப் படித்திருந்தால், நீங்கள் 'நா' காத்திருப்பீர்க்ள். எனக்கும் இந்தக் கடிதம் வரைவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது.

''கூட்டணி அரசியலின் பெயரால் தமிழ்பேசும்மக்களை கடந்த இருபது ஆண்டு காலமாக ஏமாற்றிவந்திருப்பதாக'' கூறியிருந்தீர்கள். இதைப் படித்த எங்களுடைய ஆபீஸ் பையன், கூட்டணி அமைந்து ஆறு ஆண்டுகள் தானேஆகின்றன; 1972ல் தானே கூட்டணி அமைந்தது? ஆறு ஆண்டுகளாக இயங்கிவரும் கூட்டணி எப்படி இருபது ஆண்டுகளாக தமிழ் மக்களை ஏமாற்றமுடியும்? இந்த அமைச்சருக்கு, சிறு குழந்தைக்குத் தெரியக்கூடிய இந்தச் சாதாரண கணக்குக் கூடத்தெரியவில்லையே! கணக்கில் அவ்வளவு மழுமட்டையோ? கணக்கு விடுவதில் தான் வல்லவரோ என்று கேட்கிருன். கூட்டணி அமைந்து ஆறு ஆண்டுகளில் முதல் இரண்டு ஆண்டுகள் கூட்டணியின் முக்கிய தலைவர்களிலொருவராகஇருந்து நீங்கள் முழங்கியதை நினைவூட்டுகிருன். அது பற்றி பின்னர் எழுதுகிறேன்.

சரி, உங்கள் வாதம் 20 ஆண்டுகளாகக்கூட்டணி தமிழ் பேசும்மக்களை ஏமாற்றி வருகிறது என்பது தானே? தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தாக்கினுல் தான் ஜே. ஆர். ஜெயவர்த்தனுவின் உள்ளம் குளிரும் என்பதற்காக நீங்கள் இவ்வாறு வாயில்வந்தபடி கூறினுலும், கண்ணடி வீட்டிலிருந்து கொண்டு கல்லெறிந்து பார்க்கிறீர்களே என்பதுதான் எனக்கு கவலையாக இருக்கிறது.

உங்களுக்கு நினைவு இருக்கிறதோ இல்லையோ—பதவியும் அதிகாரமும் வந்ததும் மனிதன் எப்படியெல்லாம் மாறிவிடுகிருன் என்பதற்கு நீங்களும் ஓர் உதாரணமாக இன்று மாறிவிட்டீர்கள்.

1974ம் ஆண்டு தமிழர் விடுதலைக்கூட்டணியின் முக்கிய பங்காளியாக இருக்கும் தமிழரசுக்கட்சி தனது வெள்ளி விழாவைக்கொழும்பிலே கொண்டாடியபோது 16-12-74 திகதியிட்டு உங்கள் சொந்தக் கையொப்பமிட்டு, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக அன்று இருந்த தந்தை செல்வா அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தீர்கள். அதிலே பின்வருமாறு குறிப்பிட்டிருந்தீர்கள்—

"Tomorrow you are completing 25 years of devoted service to Tamils of this country. Whatever rights are if any left to this community, it is because of your determined stand and unwavering leadership"

"இந்நாட்டுத் தமிழர்களின் சேவைக்காக உங்களை நீங்கள் அர்ப்பணித்து நாளைய தினத்துடன் 25 ஆண்டுகள் நிறைவுறுகின்றன. **இந்தச் சமுதாயத்துக்கு உரிமைகள் என்று ஏதாவது இங்கு இருக்குமானல் அதற்கு உங்களது உறுதியான நிலைப்பாடும் ஈடாட்டமில்லாத தலைமையும்தான் காரணம்"**

இவ்வாறு அருமையான கடிதமொன்றை மணிமணியான சொற்களில், சாதாரண தேவநாயகமாக இருந்த போது — தந்தை செல்வநாயகத்துக்கு எழுதியிருந்தீர்கள்.

தந்தை செல்வா தலைமை தாங்கிய இயக்கம் தனது வெள்ளி விழாவை 1974ம் ஆண்டு கொண்டாடிய போது இப்படி எழுதிய நீங்கள்—தந்தை செல்வாவின் இருபத்தைந்தாண்டு கால சேவையைப் பாராட்டிய நீங்கள் — தமிழ் சமுதாயத்துக்கு ஏதாவது உரிமைகள் இந்நாட்டில் எஞ்சியிருக்குமானுல், அதற்கு ஒரே காரணம் கூட்டணித் தலைவராக விளங்கிய தந்தை செல்வாவின் உறுதியான நிலைப்பாடும், ஈடாட்டமற்ற தலைமையுமே காரணம் என்று அழுத்தந்திருத்தமாக எழுதியிருந்த நீங்கள் — இன்று 20 ஆண்டுகளாக கூட்டணி தமிழ் பேசும் மக்களை ஏமாற்றி வருவதாக கூறுவீர்களானுல் — உங்களைப் போன்ற சந்தர்ப்பவாதி வேறு யார் இருக்க முடியும்? உங்களைப்போன்ற அரசியல் பச்சோந்தி வேறு யார் இருக்க முடியும்? பதவி ஆசையும், அதிகார போதையும் மனிதனை எப்படியெல்லாம் மாற்றிவிடுகிறது பார்த்தீர்களா?

**"குட்டக் குட்டக்குனிகிறவனும் மடையன், குனியக்குனியக் குட்டுகிறவனும் மடையன். இந்தநிலைதான் தொடர்ந்து இருக்கவேண்டுமா? தமிழர் கூட்டணியை சிறிதாக மதித்துவிடாதீர்! அது இந்நாட்டுத்**

—5-ம் பக்கம் பார்க்க

## எண்ணம்

# அக்டோபர் இரண்டும் ஆவரங்கால் தீர்மானமும்

ஆவரங்காலில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில், பல்லாயிரக் கணக்கான மக்களின் முன்னிலையில் புனிதமான ஓர் திர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ் சமுதாயத்தின் உயர்வுக்கும், அரசியல் விடுதலைக்கும் முட்டுக்கட்டையாகவும், தமிழினத்துக்கே தீராத களங்கத்தை ஏற்படுத்துவதாகவும் இரு து வரும் தீண்டாமைக்கொடுமையையும், சாதிஅடிப்படையிலான பாரபட்சங்களையும் நிர்மூலமாக்கி தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்த வேண்டும் என்ற மகோன்னதமான தீர்மானம் அது!

அதுவும் இந்த ஆண்டு காந்தியடிகள் பிறந்த தினமான அக்டோபர் இரண்டுக்கு முன்பு இதைச்செய்து முடித்து— காந்தி பிறந்த நாளன்று தமிழ் சமுதாயத்திலிருந்து சாதியடிப்படையிலான பாரபட்சங்களையும், தீண்டாமைக் கொடுமையையும் வேரோடு வெட்டி வீழ்த்தி விட்டோம் என்பதை பெருமையுடன் உலகுக்குப் பிரகடனப்படுத்துவோம் என்று மாநாட்டில் சங்கநாதம் செய்தார்கள் நம் அருமைத்தலைவர்கள்!

இது கேட்டபோது நம் உள்ளம் கிளுகிளுத்தது!

ஆனுலும்—

வட்டுக்கோட்டையில் நடைபெற்ற முதலாவது மாநாட்டின் போதும் இப்படியொரு திர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது— செயற்படாது செத்து மடிந்தது போலவே ஆவரங்கால் திர்மானமும் ஆகிவிடுமோ என்று ஒரு வித ஐயமும், ஆயாசமும், அவநம்பிக்கையும் சிலரது உள்ளங்களிலே அப்போது ஏற்படத்தான் செய்தது.

எனினும் சாதிக்கொடுமையை ஒழிப்பதையே தன் உயிர் மூச்சாகக் கொண்ட திரு. வி.என். நவரத்தினம் அவர்களின் தலைமையிலான சமூகக் குறைபாட்டு ஒழிப்புக் குழு தீவிரமாக செயற்படத் தொடங்கியபோது— அவநம்பிக்கை கொண்டோரும் புதிய தெம்பும் நம்பிக்கையும் பெற்றனர்.

சாதியொழிப்பு மாநாடு நடத்தப்பட்டது; சமூகக் குறைபாடுபற்றிய விபரங்கள் மளமளவென்று திரட்டப்பட்டன; இப்பிரச்சினையில் என்றுமில்லாத சுறுசுறுப்புக் காணப்பட்டது; அக்டோபர் 2க்கு முன்பு சமூகக் குறைபாட்டின் சில வெளித்தோற்றங்களாவது வேரோடு சாய்க்கப்படும் என்று நம்பிக்கையோடு எதிர்பார்த்தோம்.

ஆனுல் அந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை; அக்டோபர் இரண்டும் வந்து சென்று விட்டது; மாநாட்டில் அறிவித்தபடி சமூகக் குறைபாடுகளை தொலைத்து தலைமுழுகி விட்டோம் என்று காந்தி பிறந்த அந்த நாளில் அகிலத்துக்கு நம்மால் தலையை நிமிர்த்தி அறிவிக்க முடியவில்லை!

அப்படி அறிவிக்க முடியாமற் போனுலும்—ஆவரங்கால் மாநாட்டு சமூக குறைபாட்டு ஒழிப்புத் திர்மானம் தமிழ் மக்களிடையே இதுபற்றிய சிந்தனையை —அருட்டுணர்வை தூண்டி விட்டிருப்பதுடன், சாதி, தீண்டாமை ஒழிப்பு பற்றிய பிரசாரம் மிகவேகமாக முடுக்கி விடப்பட்டிருப்பதை அனைவருமே ஒப்புக் கொள்வார்கள்.

காந்தி பிறந்த நாளான அக்டோபர் இரண்டுக்கு முன்னல்-ஆவரங்காலில் நெஞ்சை நிமிர்த்தி அறிவித்தபடி தீண்டாமை மற்றும் சமூகபாரபட்சக் கொடுமைகளுக்கு ஓரளவுக்கென்றுலும் முற்றுப்புள்ளி வைக்க முடியாமற் போனது ஏன்? இக்கேள்வி சிலருக்கு கசப்பைத்தருவதாக இருந்தாலும் விடைகாணப்பட வேண்டிய கேள்வியாகும்!

தீண்டாமை, சாதிப்பாகுபாடுஒழிப்புக்கொள்கையில் நம் தலைவர்களுக்கு அந்தரங்க சுத்தியில்லையென்றே அக்கறை ஆர்வம் இல்லையென்றே கூட்டணியின் எதிரிகள் கூடக்கூறமாட்டார்கள். அப்படியிருந்தும் நாம் இதிலே சொன்னபடி சாதனையை நிலைநாட்ட முடியாமற் போனது ஏன்?

இதற்கு ஒரேயொரு காரணம்தான் நம்மால் கூற முடியும்.

**ஆவரங்கால் மாநாடு முடிவடைந்த மறுநாளிலிருந்தே வேறுவேலைகளையெல்லாம் ஒதுக்கி வைத்து விடடு, ஒவ்வொரு கூட்டணிப் பா. உ. வும், ஒவ்வொரு செயற்குழு, பொதுக்குழு தொகுதிக்கிளை, மூலக்கிளை, உறுப்பினரும் முழுநேர ஊழியர்களாக—முழுமையாக இப்புனிதப் பணியிலே ஈடுபட்டிருப்பார்களாயின ஆவரங்கால் மாநாட்டு அறைகூவல் உயிர்பெற்றிருக்கும்; அக்டோபர் இரண்டில் அதிசயிக்கத்தக்க சாதனை பிறந்திருக்கும்!**

இயக்கப்பணியிலே முழுநேர ஊழியர்கள் இல்லாத காரணத்தாலேதான் — நம் பா. உ.க்கள் முழுநேரமும் இயக்கப்பணியிலே ஈடுபடாத காரணத்தாலே தான்— இயக்க ரீதியாக இச்சாதனையை நிலைநாட்ட முடியாமற் போனதென்பதை எவரும் மறுக்க முடியாது.

இப்போதும் ஒன்றும் குடி முழுகிப்போய்விடவில்லை!

எதிர்வரும் 1979 சனவரி 31 காந்தியாரின் சிரார்த்த தினமாகும். இடையிலே இருப்பது நான்கே நான்கு மாதங்கள்; இந்த நான்கு மாதங்களில் கடைசி மூன்று மாதங்களாவது, வேறு வேலைகளை ஒதுக்கிவைத்துவிட்டு-முழுநேரமாக தீண்டாமை சாதிப்பாகுபாடு ஒழிப்புப்பணியிலே நம் பா. உ.க்கள் நேரடியாக இறங்குவார்களாயின்—காந்தியடிகளின் சிரார்த்ததினத்துக்கு முன் சாதிவேறுபாட்டுக்கு நம்மால் கல்லறை கட்டிவிட முடியும்.

இப்படியொரு திட்டத்தை தயாரித்து, கூட்டணியின் மத்திய செயற்குழுவுக்கு சமர்ப்பித்து, மூன்று மாதங்களையாவது தீண்டாமையொழிப்பு மாதங்களாகப் பிரகடனம் செய்து—அந்த நாட்களில் நமது கூட்டணி பா.உ.க்கள் ஒவ்வொருவரும் முழுநேர ஊழியர்களாக இயங்கி, கிராமந்தோறும் பாதயாத்திரைகளை மேற்கொண்டு சாதிப்பாகுபாட்டுக்கு சமாதி கட்ட, திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் இயங்கும் சமூக குறைபாட்டு ஒழிப்புக் குழு இப்பொழுதிருந்தே நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராக்கிரமபாகுவின் பேரன் வீரப்பெருமாள் என்ற தமிழனே!

## 'யாழ்ப்பாண அரசு' நூல் வெளியீட்டு விழாவில் அறிஞர் ஜேம்ஸ் இரத்தினம் ஆய்வுரை!

கலாநிதி சி. பத்மநாதன் அவர்கள் எழுதிய 'யாழ்ப்பாணஅரசு' எனும் ஆங்கில நூலின் வெளியீட்டுவிழா. ஈழத் தமிழ் எழுத்தாளர்பேரவையின் சார்பில் 23-9-78 சனியன்று மாலை, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலே, கலாநிதி. பொ. பூலோகசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

செல்வி. திலகவதி கணபதிப்பிள்ளையின் தமிழ்த் தாய் வாழ்த்தொலி விழாவைத் தொடக்கி வைக்க, திரு. ஈழவேந்தன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். நூலாசிரியர், ஏனைய பேச்சாளர்கள், படிகள் பெற்றோர் போன்ற அனைவரையும் நன்முறையில்அறிமுகஞ் செய்து வைத்ததோடு, காலத்தின் தேவையையொட்டி நூல் உருப்பெற்ற தன்மையையும்விடுதலை கோரும் இனம் தன் பழைய வரலாற்றைத் தெரிந்து வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் மேற்படி நூலானது உருப்பெறுவதற்குத் திரைமறைவில் உதவிய திருவாளர்கள். மா. இராஜேந்திரம், க. சுப்பிரமணியம் ஆகியோரின் தன்னலமற்ற முயற்சியையும் எடுத்துக் கூறி, இன் முகங் காட்டி அனைவரையும் வரவேற்றார்.

அடுத்து, கலாநிதி. பொ. பூலோகசிங்கம் அவர்கள் தனது தலைமையுரையில், நூலையும் ஆசிரியரையும் அறிமுகஞ் செய்து வைத்து, தானும் ஆசிரியரும் பல்கலைக் கழகத்திற்குள் நுழையுங் காலத்திலேயே ஆசிரியருக்கு இருந்த மொழி, இன உணர்வு, தமிழ், ஆங்கில மொழிப் புலமை, சாதாரண வேளைகளில் மிகக்கடுஞ் சொற்களை உபயோகிக்கும் ஆசிரியர் மேற்படி வரலாற்று நூலிலே அவற்றை விடுத்து நடுநிலை நின்று நோக்கிய சான்றாண்மை ஆகியவற்றையும் மொழிந்தார்.

தொடர்ந்து த. வி. கூட்டணியின் தலைவர். திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் நூலை வெளியிட்டு வைத்து ஆசிரியரைப் பாராட்டியதோடு இது போன்ற நூல்கள் தமிழ் மொழியிலும் எழுதப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். திருவாளர்கள். வி. எஸ். துரைராஜா இ. ஸ்ரீநிவாசன் ஆகியோர் படிகளைப் பெற்றதன் பின்னர், என்றுங் காணாத தொகையினர் மேடைக்குச் சென்று நூற்படிகளைப் பெற்றமை தமிழினத்தின் விழிப்பினை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது.

ஆங்கில மொழியிலே அமைந்திருந்த அந்நூலை ஆய்ந்த திரு. ஜேம்ஸ். ரி இரத்தினம் அவர்கள் அம் மொழியிலேயே உரையையும் நிகழ்த்தினர்.

அவரின் உரையிலே, சிங்கள மன்னனான பராக்கிரமபாகுவின் பேரனின் பெயர் பாண்டியனான வீரப்பெருமாள் என்பதும் சிங்களவர் என்ற இனம் உருவாக எவ்வளவோ காலத்திற்கு முன்பிருந்தே தமிழன் இலங்கைத் தீவிலே வசித்துவருகின்றானதவாலே தமிழீழம் அமையவேண்டிய நிலையை ஏற்படுத்தியதன் மூலம் சிங்களவனே பிரிவினையைச் செய்பவனென்றுனென்பதும் மிகவும் கவனமாக நோக்கப்பட வேண்டியவை.

அடுத்து கலாநிதி, கே. எஸ். நடராசா அவர்கள் தமிழிலே தன் ஆய்வு உரையின் போது நூலாசிரியரிடம் 'யாழ்ப்பாணம்' என்ற பெயரின் வரலாறுபற்றிய ஆய்வினை அடுத்த பதிப்பிலாவது சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து, கலாநிதி. அ. சிவராசா, திரு. க. நவசோதி, திரு. எஸ். குகைதாசன் (நா உ.) ஆகியோரின் உரைகள் நடைபெற்றன. நூலாசிரியர், கலாநிதி. சி. பத்மநாதன் குறிப்புரை நிகழ்த்தினர். திரு. இ. பேரின்பநாயகம் நன்றியுரை வழங்கினர்.

செல்வி. திலகவதி கணபதிப்பிள்ளையின் தமிழீழத் தேசிய கீதத்துடன் விழா இனிது நிறைவுற்றது.

---

## சுதந்திரன் சந்தா

ஓராண்டு சந்தா ரூபா 50-00
அரையாண்டு ,, ரூபா 25-00

---

## மட்டக்களப்பு—

—1-ம் பக்கத் தொடர்

விசப்பட்டதாகவும், காசி ஆனந்தன்மீது வெறிபிடித்த சிங்களவன் ஒருவன் காறி உமிழ்ந்ததாகவும், மற்றோர் இளைஞர் கடுமையாகத் தாக்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

தமிழ் மண்ணிலுள்ள சிறைச்சாலையிலும் தமிழனுக்குப் பாதுகாப்பு கிடைப்பதாதா? மட்டக்களப்புச் சிறைச்சாலையில் இம்மாதிரி சம்பவங்கள் நடைபெறுமற் தடுக்க உடன் நடவடிக்கையெடுக்கப்படுமா என்று கேட்கிறார்கள் அங்குள்ள தமிழ்க் கைதிகள்.

## கலாபதி பிணை —

—1-ம் பக்கத் தொடர்

கலாபதி துரையப்பா கொலை வழக்கில் நிரபராதியாகக் காணப்பட்டுவிடுதலை செய்யப்பட்டும்பத்மநாதன் கொலை சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் கடந்த 4 மாதங்களாக தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.


**பரபரப்புடன் இப்போது விற்பனையாகிறது! "த சன்சோனி கொமிஷன் எவிடென்ஸ்" ஆங்கில வார இதழ் விலை ரூபா ஒன்று.**


## சந்தர்ப்பவாதி ,,

—4-ம் பக்கத் தொடர்

தமிழ் மக்களில் 99 வீத மானோரது ஆதரவைப் பெற்றது. ஆட்சிபீடத்தைக் கைப்பற்றஎப்படி நீங்கள் ஒன்று சேர்ந்தீர்களோ — அதேபோல தமிழர்களின் உரிமைகளைப்பெற நாம் ஏன் தமிழர் கூட்டணியின் கீழ் ஒன்றுசேர முடியாது?"

அமைச்சர் ஐயா அவர்களே மேற்கண்ட இலட்சிய முழக்கம் — வேறுயாரும் நிகழ்த்தியது அல்ல — சாட்சாத் நீங்களே 5 7-1972ல் தேசிய அரசுப் பேரவையில் பேசியது. நம்பிக்கையில்லாவிடின் ஹன்சார்ட்டை ஒருமுறை தேடிப்பிடித்து கண்ணுடியைப் போட்டுக் கொண்டு படித்துப்பாருங்கள்!

இப்படிக் கூறிய நீங்கள் தான் இன்றைக்கு கூட்டணி தமிழ் மக்களை ஏமாற்றி வருவதாக 'றெக்கோட்டை' மாற்றிப்போடுகிறீர்கள் இப்போது யார் சந்தர்ப்பவாதி யார் காலத்துக்கு காலம் நிறத்தை மாற்றும் பச்சோந்தி என்பது தெரிகிறதா? கண்ணுடிக்கு முன் ஒருமுறை நின்றுபாருங்கள், அது யாரென்று தெரியும்!

உங்களுக்கு எழுத வேண்டியவை இன்னும் பலவுண்டு தொடர்ந்து எழுதுவேன்.

## சிங்கள அர...

—3-ம் பக்கத் தொடர்

சில அம்சங்களையாவது ஒழித்துக்கட்டுவோம் என்று அந்தரங்க சுத்தியுடன் உறுதியெடுத்தோம். நாம் எதிர்பார்த்தபடி அக்டோபர் 2க்கு முன்பு இந்தப் பணியில் முழுமையாக வெற்றி பெற முடியாமற் போனாலும் கூட, ஓரளவுக்கு சாதிக் கொடுமைகள் பற்றிய சகல விபரங்களையும் திரட்டியுள்ளோம். அந்த விபரங்களின் அடிப்படையில் நமது குழு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு சாதிக் கொடுமைகளை அகற்றும் பணியில் தீவிரமாக ஈடுபடும்.

"சாதியே அற்ற ஒரு சமுதாயத்தை— சாதியென்றால் என்ன வென்றே புரிந்து கொள்ளாத ஒரு சமுதாயத்தை — உருவாக்குவதே நமது இறுதி இலட்சியம்"

பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினம் பேசுகையில் — சாதி எல்லா மட்டங்களிலுமிருந்தும அகற்றப்படவேண்டுமென்றும் ஒரு சாரரை மற்றொரு சாரார் நசுக்கிக் கொண்டு இன விடுதலை கோருவதில் அர்த்தமில்லையென்றும் சமத்துவ சமுதாயமாக தமிழினம் உருவாக வேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவைமகேசன் பேசுகையில்— புரட்சியொன்றின் மூலமே சாதியை வேரறுக்க முடியுமென்றும், இந்தப் பணியில் புரட்சி மனப்பான்மை கொண்ட இளைஞர்களே முன்னின்று பணியாற்ற வேண்டுமென்றும், கூட்டணியின் தீர்மானப்படி அக்டோபர் 2க்கு முன்பு தீண்டாமைக் கொடுமை முற்றாக அகற்றப்படமுடியாமற் போனாலும் கூட, அதற்கு எதிரான உணர்வு வளர்க்கப்பட்டுள்ளதென்றும், தீண்டாமை மட்டுமன்றி, சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாரதி கூறியதுபோல சாதிகளேயற்ற சமுதாயத்தை உருவாக்க உழைக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினர்,

யாழ் பா. உ. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில்—சாதிப் பாகுபாடு காட்டும் பாடசாலைகளுக்கு தாம் நிதி ஒதுக்க போவதில்லையென்று அறிவித்தார்.

மற்றும் திருவாளர்கள் ஈழவேந்தன், அழகையா, குருநகர் ஜீவி. பண்டிதர் இரத்தினம், மொகிதீன் பிச்சை, எஸ். ரி. தியாகராசா, இ. பா. குணரத்தினம், வண்ணை ஆனந்தன் ஆகியோரும் பேசினர்.

மனிதருக்குள் பாரபட்சம் காட்டப்படுவதைக் கண்டித்து திருப்பெருந்திரு. சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகள் அனுப்பியிருந்த செய்தியை சட்டத்தரணி பாலசுப்பிரமணியம் சபையில் வாசித்தார்.

கூட்டமுடிவில், செக்கோசிலவேக்கிய விடுதலைப் போராட்டம் பற்றிய திரைப்படம் காட்டப்பட்டது.


**சுடர்**
CHUDAR

( ஆனி—புரட்டாதி—இதழ் )
விற்பனையாகிறது.

—இந்த இதழில்—

நெஞ்சிலே விழுந்த நெருப்பு — 'காவலூரான்' (சிறு கதை)
கண்டக்டர் இல்லாத பஸ் — காசி ஆனந்தன் (கட்டுரை)
அண்ணு வாழ்கிறார் — ஈழவேந்தன் (கட்டுரை)
அமிழ்ந்துபோன எண்ணங்கள் - செ. குணரத்தினம் (சிறுகதை)
மரண அழுகை இன்னும் கேட்கிறது — ஆ. தங்கராசா (சிறுகதை)

மற்றும் பல சிறுகதைகள், விநோதச் செய்திகள், பஞ்சதந்திரக் கதைகள், புதுவித அம்சங்களுடன் வெளிவந்திருக்கிறது.

ஒவ்வொரு திங்களும் 10-ம் நாள் தவறாது 'சுடர்' வெளிவரும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

விற்பனையாளர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
'சுடர்'
194ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.



**விற்பனைக்கு**

ஜீப் இடது பக்க CN மொடல் நல்லநிலையிலுள்ளது. சொந்தக்காரர் வெளியூர்ப் பயணம். 15, சோமசுந்தரம் அவனியு, சுண்டுகுளி, யாழ்ப்பாணம்.



**'பனை ஓலைத் தொப்பி'**

100 மில்க்வைற் நீலசோப்
மேலுறைகளை சேகரித்து கொடுத்து
அழகிய பனை ஓலைத் தொப்பியை
பெற்றுக் கொள்ளுங்கள்

மில்க்வைற் — யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்யுணர்வின் விளக்கமே செந்தமிழின் இலக்கணம்!

## தமிழ் 'தெய்வத்தமிழ்' என ஏன் அழைக்கப்படுகிறது?

நம் தமிழ் மொழியிலே பல வகையான அறிவுக்கூறுகள் இயல்பாக இருக்கின்றன. இந்த மொழி ஏதோ ஒரு பழமையான நீச மொழியென்று சொல்லிக் கொண்டு வருகிறார்களோ. அதைப்பற்றி நீங்கள் நன்றாக நினைவிலே வைத்துக்கொள்ளும்படி சில உண்மைச் சொற்களை உங்களிடத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பாருங்கள், பல வகையான கூறுகள் தமிழ் மொழியிலே உண்டு. அதாவது நாம் இன்றைக்கு அறிவியல் வளர்ச்சி பெற்ற காலம். இந்த அறிவியல் வளர்ச்சிக்குத் தகுந்தாற்போல் நம்முடைய மொழி பயன்படக் கூடுமா என்பது ஒரு பெரிய ஆராய்ச்சி. பொதுமக்களாகிய நீங்கள் சிலவற்றைத் தெரிந்தே வைத்திருக்க வேண்டுமென்பதற்காக உங்களுக்குச் சில சொற்களை எடுத்துக்காட்டுகிறேன்.

நாம் இந்த உலகத்திலே பிறந்தோம். மாந்தர்களாகப் பிறந்த நமக்கு சில வாழ்க்கை நிலைகள் தேவைதான். ஆனால் அடிப்படையாக எதற்குப் பிறந்தோம்? என்ன பயன் கருதிப்பிறந்தோம்? எந்தப்பயன் கருதி நாம் வாழ்கிறோம்? என்பதைப் பற்றி நினைப்பதுமெய்யறிவு. அதாவது மெய்யுணர்வு. அதிலிருந்துதான் மதம் தோன்றுகிறது. இந்த உணர்ச்சிகள் தமிழுக்கு தொடக்கத்திலிருந்தே இருந்தது. எனவே தமிழர் தம்முடைய எழுத்துக்களை பிரிக்கிற போது கூட உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள், என்று பிரித்தார்கள். வேறு எந்த மொழியிலும் இப்படிப்பட்ட பிரிவு இருக்கிறதை நீங்கள் பார்க்கவே முடியாது. உயிர்மெய்—உயிர் எழுத்துக்களும், மெய் எழுத்துக்களும் அந்த இரண்டு எழுத்துக்களும் சேர்ந்து உயிர்மெய் எழுத்துக்களும் தமிழனுடைய மொழியிலே இருக்கிறது.

### மெய்யெழுத்துக்கள்

உயிர் எழுத்துக்கள் என்பவை இருக்கின்றது போல், தனித்து சில உயிர்கள் இயங்குகின்றன. மெய்யெழுத்துக்கள் இருப்பதுபோல், மெய்கள் தனித்து உயிர் நீங்கி இருக்கின்ற மெய்கள் உண்டு. மெய்களுக்கு இயக்கமில்லை, ஒலியில்லை, க்,ங்,ச், என்று சொல்லக்கூடாது. பழங்காலத்திலே அந்த எழுத்து வரிசைகளை ககரமெய், ஙகரமெய், சகரமெய் என்று சொன்னார்கள். இப்பொழுது நாம் குழந்தைகளுக்கு, க்,ங்,ச் என்று சொல்லிக் கொடுக்கிறோம். இப்படிச் சொல்லிக்கொடுக்கக் கூடாது. அப்படிச்சொல்லிக்கொடுத்தால் அ,க்,ஆ,—ஐக்கா என்று சொல்ல வேண்டிவரும். அதனாலே அந்தப் பழங்காலத்திலே அறிஞர்கள் அந்த மெய் எழுத்தை அவர்கள் ஒலிக்கவில்லை. அப்படி ஒலிப்பு அதற்கு உண்டாக்கினால், மெய் ஒலிக்கத் தொடங்கினால் பல வகையான குழப்பங்கள் நேரும் என்று அவர்கள் கண்டறிந்து அதனை மெய்யெழுத்துக்கள், ஒலியற்ற எழுத்துக்கள்; மெய்க்கு உயிரில்லாமற் போனால் எப்படி இயக்கமில்லையோ அதுபோல் அந்த எழுத்துக்களைச் செய்தார்கள்.

### குறில் நெடில்

இந்த உயிர் எழுத்துக்களிலே கூட உயிரில்லை. பாருங்கள், "அவன் மிகக் கெட்டியான உயிர்க்காரனையா, நெடுநாள் இருக்கிறான்" என்று சொல்கிறோம். அவன் சும்மா கொஞ்சம் உயிர் இருந்தது. கொஞ்ச



நாள் வாழ்ந்தான், போய் விட்டான் பொசுக்கென்று. ஏதோ அற்ப ஆயுசு என்று சொல்கிறோம். இந்த வேறுபாட்டை அவர்கள் கவனித்தார்கள். உடனே உயிர் எழுத்துக்களை இரண்டு வகையாகப் பிரித்தார்கள் குறில்—நெடில். நீண்டு வாழ்கின்ற அந்த உயிர் போல் நீண்டு ஒலிக்கின்ற உயிர். குறுகி வாழ்கின்ற உயிர் போல் குறுகி ஒலிக்கின்ற உயிர் என்று பிரித்தார்கள்.

### ஏழு வேற்றுமைகள்

மெய் எழுத்துக்களைப் பிரித்தார்கள்; நம்முடைய உடம்புகளைப் பாருங்கள். வலியஉடம்பு, மெலியஉடம்பு இடைத்தரமான உடம்பு, என்று மூன்று வகையான நிலைகளில் பிரிக்கலாம். அதே போல் மெய்யெழுத்துக்களை வலிய மெய்கள், மெலிய மெய்கள், இடைநிலை மெய்கள் என்று வல்லெழுத்துக்கள், மெல்லெழுத்துக்கள், இடையெழுத்துக்கள் என்று அந்த மெய்களைப் பிரித்தார்கள். அந்த உயிரும், மெய்யும் சேருகின்ற எழுத்துக்களை உயிர்மெய் எழுத்துக்கள்— அந்த எழுத்துக்கள் தான் உலவுகின்ற எழுத்துக்கள் என்று சொன்னார்கள். இதை நன்றாக நீங்கள் பார்க்க வேண்டும். இப்படிப் பிரித்த அந்த எழுத்துக்களை இலக்கணப்படி ஏழு வேற்றுமைகளை அதிலே அமைத்தார்கள்.

இந்த ஏழு வேற்றுமைகளைப் பிரித்ததன் நோக்கம் மாந்தப் பிறவி மட்டுமன்று, உயிர்ப்பிறவி ஏழு பிறவிகளாக இருக்கின்றன. அந்த ஏழு பிறவிக்காகவும் ஏழு வகையாக அந்த உயிர் வேறுபடுகிறது என்கின்ற உண்மையை உணர்த்துவதற்காக அந்த எழுத்துக்களை ஏழு வேற்றுமைகளா[illegible]

கொண்ட எழுத்துக்களாகப் பிரித்தார்கள்.

தொடக்கத்திலே இருக்கிற அந்த எழுவாய் வேற்றுமை, "முருகன்" என்பது ஆண்மாவின் இயல்பான தன்மையுடையதென்றும், இறுதி இருக்கின்ற எட்டாம் வேற்றுமை முருகா, கந்தா என்றும் சொல்கிறது. உயிரினுடைய இறுதியான மெய்ப்பொருள் முன்னேற்ற வேற்றுமை என்றும், அது இறைவனை நோக்கி ஓலமிடுகிறதென்றும் அவர்கள் முனிவர்களாகையினாலே நுண்மையாக அந்த எழுத்து வேறுபாடுகளை அமைத்தார்கள். அதற்கு ஒரு சான்றாக இன்னொன்றை நான் உங்களுக்குச் சொல்கின்றேன்.

தமிழ் மொழி மெய்யறிவு சார்ந்த மொழி என்கிற ஒரு சிறிய உண்மையை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். ஏதோ வாயிலே

**தென்மொழி**
**பெருஞ்சித்திரனார்**

வந்ததெல்லாம் உளறுகின்ற மொழியன்று. தமிழ் மொழி மிக வளர்ந்த மொழி. பிறப்பு, இறப்பு என்ற இரண்டு சொற்களை எடுத்துப் பாருங்கள். அந்தப் பிறப்பு, இறப்பு என்ற சொற்களிலே நாலு எழுத்துக்கள் இருக்கின்றன. அதிலே இறுதியான மூன்று எழுத்துக்கள் ற,ப்,பு என்று இருக்கிறது. இந்த மூன்று எழுத்துக்களும் இரண்டு சொற்களிலே ஒன்றாக இருக்கின்றன. முதலெழுத்து மட்டும் வேறுபடுகிறது. அந்த 'பி' 'இ' என்கின்ற அந்த இரண்டு எழுத்துக்களில் ஒருஎழுத்து உயர்மெய் எழுத்து; ஒரு எழுத்து உயிரெழுத்து. இறப்பு என்பதை அவர்கள் என்ன கருதினார்கள். உயிராவது தனித்து இயங்குகிற நிலை. அதுதான் இறப்பு நிலை. இந்த உடலை விட்டுவிட்டு உயிர் இந்த உலகத்திலே தனித்து இயங்கிக் கொண்டிருக்கின்ற நிலை.

பிறப்புஎன்பதைஅவர்கள் என்ன கருதினார்கள்? பிறப்பு என்பதிலே அந்தப் 'பி' என்கின்ற உயிர்மெய் எழுத்தை 'ப்', 'இ' என்று உயிரும் மெய்யுமாகப்பிரித்துபிறப்பு எப்படி நேரிடுகிறது என்று சொன்னால், இந்த மெய்யோடு உயிர்வந்து பொருந்தி வாழுகிற நிலை பிறப்பு நிலையென்று அவர்கள் சொன்னார்கள். இப்படி எழுத்துக்களிலே கூட மெய்ப்பொருளுணர்ச்சியை இந்த மொழியைத் தோற்றுவித்தவர்கள் முனிவர்களாகையினாலே அந்த உண்மையான தத்துவத்தோடு, மெய்ப்பொருளோடு அந்த மொழியை அமைத்திருக்கிறார்கள். எனவேதான் இந்த மொழியை யாராலும்அழிக்க முடியாது. என்றென்றும் நிலையாகஇருக்கும் அது-மற்றப்படி வேறு எந்த நிலையிலும்இதையாராலும் சிதைக்கவும் முடியாது. என்றும் மாறாத இளமையான ஒரு தோற்றம்அதற்கு இருந்து கொண்டேயிருக்கும். எனவேதான் இதைத் "தெய்வத்தமிழ்" என்று சொல்கிறார்கள்.

இனி இப்படி அறிவியல் முறைப்படி இந்தத் தமிழ் மொழியில் என்ன வகையான உண்மைகள் இருக்கின்றன என்று பார்க்கலாம். சொற்களெல்லாம் அறிவியலடிப்படையிலே தோன்றிய சொற்களென்று சொல்லிவிட முடியாது. ஏனென்றால் மிகப் பழங்காலத்திலே தோன்றியசொற்கள். ஆனால் அறிவியலென்பது என்ன? இயற்கையிலே உண்மையான ஒரு நிலைதானே அறிவியல். ஏற்கனவே காற்று இருந்தது. இந்த மின்சார ஆற்றலும் இருந்தது. அதை ஒருவன் கண்டுபிடித்தான், ஆனால் கண்டுபிடிப்பதற்கு முன் அந்த ஆற்றலொன்று இருந்தது. அது இல்லாமலில்லை. இருந்துகொண்டுதான்இருந்தது. இப்பொழுது கண்டுபிடிக்கிற ஒலிகள், அல்லது ஒலிக்கூறுகள், அல்லது கோளங்கள், வேறு நிலங்கள் எல்லாம் என்றைக்கும் இருக்கின்றன. அந்த இருந்த ஒன்றைத்தான் புதிய அறிவியலறிஞர்கள் முயற்சியாலே கண்டுபிடித்தார்கள். அப்படிக் கண்டுபிடிக்கிற அந்த அறிவு அறிவியலறிவு.

இந்த அறிவியலறிவு தமிழிலேஏற்கனவே'சித்தர்கள்' என்று சொல்லப்படுகிற ஞான ஒளியுடையவர்களாலே அந்த மூல அறிவு அந்த மொழியிலே புகுத்தப்பட்டது. சித்தர்கள் அந்த அறிவு நிலையிற் கண்டு சொன்ன அந்தச் சொற்களை உங்களுக்கு எடுத்துச் சொன்னால் மிக வியப்பாக இருக்கும். அத்தகைய உண்மை நிலைகளை அவர்கள்பார்த்தது பார்த்ததுபோல் சொல்லியிருக்கிறார்கள். சித்தநூல்கள், சித்த மருத்துவ நூல்களிலே, இன்றைக்குமருத்துவத்திலே நாம் புதிதாக உடலுக்குள்ளே என்ன என்ன நிகழ்கின்றன அந்த உண்மைகளையெல்லாம் உண்மையான உணர்வோடு அன்றே வெளிப்படுத்தியிருந்தார்கள். அத்தகைய அறிவுணர்ச்சி அவர்களுக்கு இருந்தது. அந்த உணர்ச்சியைத்தான் ஞான உணர்வு என்று நாம் நம்மிலே சிலரைப் பாராட்டுகிறோம். இத்தகைய உணர்வு நிலை சார்ந்த இந்தத் தமிழிலேஅதற்கான அடிப்படைச் சொற்கள்—மூலச் சொற்கள் பல சொற்கள் இருந்தன. இப்பொழுதும் இருக்கின்றன. எனவே மொழியைப் பற்றி நாம் எந்த வகையான தாழ்ச்சியும் பெற்றவர்களல்ல.

எனவேதான் பல சொற்கள் வேறு மொழிகளிலே தமிழ்மொழியிலிருந்துபோய் வழங்குகின்றன. நம்முடைய மொழியை நீங்கள் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் மூலச் சொற்களைப் பற்றி ஒரு சிறிய அறிவு உங்களுக்குத் தெரிய வேண்டும். நான் மொழியைப் பற்றியே அதிகமாகச் சொல்கிறேன் என்று நீங்கள் நினைத்துக் கொள்ளக்கூடாது. அடிப்படையான ஒரு உணர்வு நிலையை உங்களிடத்தில் எந்த வகையிலாவது தோற்றுவித்துவிடவேண்டுமென்ற ஒரு வேட்கைதான் எனக்கு இவ்வாறு பேசச்செய்கிறது.

---

# பிறந்த தின வாழ்த்து

தமிழ் ஈழம் என்று வரும்? தமிழினம் என்று தலை நிமிரும்? அந்த ஒளிமயமான எதிர்காலம் என்று வரும்? என்று எதிர்பார்க்கிறதோ இந்தப் பூஞ்சிட்டு?



நட்டினதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்த இரத்தின சிங்கம் அன்னசோதி தம்பதிகளின் செல்வப்புதல்வி வாசுகி தனது நான்காவதுபிறந்ததினத்தை 6-10-78 வெள்ளிக்கிழமை மிகவும் குதூகலமாகக் கொண்டாடினார். இவர் சகல செல்வமும் சிறப்பும் பெற்று நீடூழி வாழ்க என்று அப்பா, அம்மா, அப்பம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணன்மார், அக்காமார், தம்பிமார், நளாயினி தங்கச்சி, வசந்தி தங்கச்சி, மற்றும் உறவினர்கள் வாழ்த்துகிறார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "ஆதிக்க வெறியை முறியடித்திட அறுவை சிகிச்சையே பெரியார் வழி!"

## யாழ் திறந்த வெளியரங்கில் வீரமணி வீரவுரை!

**"தீண்டாமை ஒழிந்தால் மட்டும் போதாது; சாதியே ஒழிய வேண்டும் என்பதே தந்தை பெரியாரின் கொள்கையாகும். எனவேதான் சாதியமைப்பின் மூலத்தையே அவர் கடுமையாகச் சாடினார். ஐயாயிர ஆண்டுகாலமாக தமிழ் சமுதாயத்தை மூடிக்கிடந்த அழுக்கைத் துடைக்க வந்தவர் பெரியார் ஈ.வெ.ரா. எங்கெங்கு அடிமைத்தனமும், சாதித்திமிரும் காணப்படுகிறதோ— எங்கெங்கு மனிதன் மனிதனை மதிக்கப்படவில்லையோ— அங்கங்கெல்லாம் பெரியார் தேவைப்படுகிறார்; பெரியாரின் தத்துவங்கள், பெரியாரின் மருந்துகள், தேவைப்படுகின்றன; பெரியார் அவர்கள் மறைந்து விட்டாலும், அவர் விட்டுச்சென்ற தத்துவங்கள், சிந்தனைகள், தமிழ் சமுதாயத்துக்கு என்றும் வழிகாட்டிக்கொண்டேயிருக்கும்!"**

இவ்வாறு யாழ்ப்பாணத்தி[ல்] 27-9-78 புதன்கிழமை மாலை நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் கூட்டத்தில் பேசிய தமிழக திராவிடர் கழகப் பொதுச் செயலாளரும் விடுதலை இதழின் ஆசிரியருமான திரு. கி. வீரமணி எம். ஏ. அவர்கள் குறிப்பிட்டார். இவ்விழாவுக்கு திரு. பற்குணம் தலைமை தாங்கினார். இவ்விழாவில் யாழ் பா.உ. வி. யோகேஸ்வரன் சாவகச்சேரி பா.உ. திரு. வி.என். நவரத்தினம், வண்ணை ஆனந்தன், அ. பொ. செல்லையா, வி. பொன்னம்பலம், ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

[த]ந்தை பெரியார், தந்தை செல்வா, அறிஞர் அண்ணா ஆகியோரின் பெரிய திருவுருவப் படங்கள் மேடையை அலங்கரித்தன. திரு. வீரமணியுடன் தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்த திராவிடக் கழகப் பிரமுகர்களான திரு. கணேசன், திருமதி பார்வதி கணேசன் ஆகியோரும் விழாவில் கலந்துகொண்டனர். திருமதி பார்வதி கணேசன் பெரியார் அவர்களைப் பற்றி ஓர் பாட்டுப்பாடினார்.

### புரட்சித்தலைவர் [பெ]ரியார்

திரு. கி. வீரமணி அவர்கள் சுமார் ஒன்றரை மணி நேரம் தந்தை பெரியார் அவர்களைப்பற்றி உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் கூறியதாவது:-

"பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தமிழ் நாட்டின் மிகப்பெரிய புரட்சி வீரர். தமிழ் நாட்டு மக்களின் சிந்தனைப் போக்கையே மாற்றியமைத்தவர் ஐயா அவர்களே. அவரது அறுபது ஆண்டுகால இடைவிடாத பணியினால் தான் தமிழ் நாட்டு மக்கள் தம்மை [உண]ர்ந்தார்கள்; சுயமரியாதையுள்ள மக்களாக மாறினார்கள்; அடித்தளத்து மக்கள் உரிமை உணர்வு பெற்றார்கள்.

இரண்டாயிர ஆண்டுகளுக்கு இந்திய வரலாற்றிலேயே பெரியாரைப் போன்ற ஒரு புரட்சித் தலைவரை— சிந்தனையாளரை— சமூக சீர்திருத்த வாதியை நாம் கண்டதில்லை; இந்திய வரலாறு பற்றி ஆய்வு நடத்திய அமெரிக்கப் பேராசிரியர் ஒருவரே இவ்வாறு கூறியிருப்பதாக ஆனந்தவிகடன் பத்திரிகை எழுதியுள்ளது.

யாருக்கும் அஞ்சாது, எந்த இடத்திலும் தயங்காது தனக்குச் சரியென்று பட்டதைக் கூறும் துணிவு பெரியாரிடம் இருந்தது. அநீதி அக்கிரமம் எங்கு காணப்பட்டாலும், மனிதன் இழிவாக எங்கு நடத்தப்பட்டாலும் அதைக்கண்டு சீறிஎழுந்தவர் பெரியார்.

மிருகங்களுக்கு இல்லாத ஒரு சிறந்த பண்பு மனிதனுக்கு இருக்கிறது. அதுதான் சுயமரியாதை உணர்ச்சி. அந்த உணர்ச்சியின்றி மனிதன் மிதிபட்ட நிலை கண்டு கொதித்தெழுந்து சுயமரியாதை உணர்வை யூட்டியவர் பெரியார்.

### அறுவை சிகிச்சை

சமுதாயத்தில் புரையோடிப் போயிருந்த சாதியெனும் வியாதியை நீக்குவதற்கு பெரியாருக்கு முன் பலரும் பலவிதமானமருந்துகளைக் கொடுத்துப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் குணம் காணமுடியவில்லை. சாதியை ஒழிக்க முடியவில்லை.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று வள்ளுவர் கூறிப்பார்த்தார். "சாதி யாவதேதடா" என்று சித்தர்கள் பாடினார்கள்; "சாதியிரண்டொழிய வேறில்லை" என்று கூறிப் பார்த்தோம்— சமய குரவர்களும் சாடினார்கள். ஆனால் சாதியொழிக்கப் படவில்லை. சாதாரண மருந்துகளினால் சாதி வியாதியை ஒழித்து விட முடியவில்லை.

இந் நிலையில்தான் பெரியார் அவர்கள் புதிய வழியைக் கையாண்டார். அறுவை சிகிச்சை செய்வதைத் தவிர சாதியை வேரறுக்க வேறு வழியில்லையென்று முடிவு செய்து அந்த வழியிலே இறங்கினார். இதைக்கண்டு பலர் பயந்தனர்; நடுங்கினர். ஆனாலும் பெரியார் அஞ்சவில்லை. அவர் சமுதாயத்தை பீடித்திருந்த சாதியெனும் புற்றுநோயை வெட்டியெறிய அறுவை சிகிச்சை செய்ய ஆரம்பித்தார். இது பலருக்கு கசப்பாக அன்று இருந்தாலும், பெரியார் மேற்கொண்ட அறுவை சிகிச்சையின் பயன் இன்று தெரிகிறது; சாதியமைப்பு வேரறுகிறது; சனாதனம் கிலிபிடித்து ஓடுகிறது.

### தேசியம் என்றால் என்ன?

சமுதாயத்திலே படிந்திருந்த இந்த அழுக்கை அகற்றுவதற்கு தன்னந்தனியனாக நின்று போராடி தம்மை நோக்கி வந்த எதிர்ப்புக்களைக் கண்டு அஞ்சாது, அவற்றையெல்லாம் முறியடித்து, வெற்றி கண்ட புரட்சியாளர் பெரியார்.

அவர் ஆரம்பத்தில் இந்திய தேசிய காங்கிரசின் தமிழ்நாட்டுத் தலைவராக இருந்து, மகாத்மா காந்தியின் நம்பிக்கையையும், அன்பையும் பெருமளவுக்குப் பணியாற்றினாரென்றாலும், தேசியம் என்ற போர்வையிலும் பார்ப்பனீய சாதிவெறி காங்கிரசுக்குள் புகுந்திருந்தைக் கண்டு அதை விட்டு வெளியேறி சமூகசீர்திருத்த வாதியாக மாறினார். ராஜாஜி போன்றவர்கள் பெரியாரைப் பயமுறுத்திய போதும், துணிவுடன் கைத்தடியை ஒரு தட்டுத் தட்டி விட்டு காங்கிரசிலிருந்து வெளியேறி சமூக சீர்திருத்தப் பணியிலே இறங்கினார்.

தேசியம் என்பது மனிதனை மனிதன் மதிப்பதே தவிர— மனிதனை மனிதன் மிதிப்பதல்ல என்று எடுத்துக் கூறினார்.

### கடவுளுக்கும் எதிர்ப்பு

சாதியை ஒழித்துக் கட்டும் பணியில் பெரியார் இறங்கிய போது, சாதியையும், வர்ணாசிரம தர்மத்தையும் நிலைநாட்டுவதற்கு மதம், கடவுள் என்ற போர்வைக்குள் பிற்போக்குவாதிகள் நுழைந்தனர். கடவுள் தான் சாதியை உண்டாக்கியது என்று கூறி மனுஸ்மிருதியை ஆதாரமாகக் காட்டினார்கள். உடனே பெரியார் தயங்கவில்லை; சாதியை உண்டாக்கியது கடவுள் என்றால், சாதியை ஒழிக்கத் தடையாக இருக்கும் கடவுளையும் எதிர்ப்பேன் என்று கிளம்பினார். இது பலருக்கு நடுக்கத்தைக் கொடுத்தது.

இவ்வாறு சாதியின் மூல வேரைக் கண்டு பிடித்து அதைச் சாடினார் பெரியார். அதனால்சனாதனக்கோட்டை கலகலத்தது. எந்த உருவில் சாதி வந்தாலும் அதை எதிர்த்தார் அவர்.

காந்தியடிகள் கூட தீண்டாமை மட்டும் ஒழிந்தால் போதும் என்றுதான் கூறினார். ஆனால் பெரியாரோ தீண்டாமை மட்டுமல்ல, சாதியே ஒழிய வேண்டும்— ஒழிக்கப்படவேண்டும்என்ற கொள்கையை முன் வைத்து அதற்காக உழைத்தார்.

### அரசியல் வாதியால் முடியாது

பெரியார் அவர்கள் ஓர் அரசியல் தலைவரல்ல; அவர் ஓர் சமூகசீர்திருத்த புரட்சித் தலைவர்; சிந்தனையாளர். எனவேதான் அவர் அஞ்சாது தமது கொள்கைக்காக உழைத்தார்; அரசியல் வாதிகள் ஐந்து ஆண்டுக்கொருமுறை வரும் தேர்தலில் மக்களிடமிருந்து வாக்குகள் பெறவேண்டுமென்பதற்காக மக்களுக்கு கசப்பானதை சொல்லாமல் இனிப்பானதை மட்டுமே கூறுவார்கள். ஆனால் சமூகசீர்திருத்த வாதியோ தேர்தலைப்பற்றியோ வேறு எதைப்பற்றியுமோ கவலைப்படாது நெஞ்சுரத்துடன் தனது இலட்சியத்தை மக்களுக்குஎடுத்துக் கூறுவான்.

அரசியல் தலைவர்களுக்கும், சமுதாய சீர்திருத்த வாதிகளுக்குமிடையே ஓர் அடிப்படை வேறுபாடுண்டு; அரசியல் வாதிகள் மக்களுக்குப் பிடித்தமானவற்றை மட்டுமே கூறி, மக்களின் பின்னால் போவார்கள். ஆனால் சமூகசீர்திருத்தவாதிகளோ, மக்களுக்கு பிடித்தவைகளை கூறாது, மக்களுக்குத் தேவையானவற்றை கூறுவார்கள். மக்களுக்குப் பின்னால் ஓடாது மக்களைத் தம் பின்னால் அழைத்துச் செல்வார்கள்.

சமூகசீர்திருத்த தலைவரான தந்தை பெரியார் அவர்கள் என்றைக்கும் மக்களுக்குப் பின்னால் போனவரல்ல; தனக்குப் பின்னால் மக்களை வரச் செய்தவர்.

பதவி, தேர்தல், வாக்குகள் இவைகளைப்பற்றி கவலைப்படும் அரசியல் வாதிகளால், சமூகசீர்திருத்த பணியில் இறங்க முடியாது. எந்த ஆசையுமில்லாது, இலட்சிய நோக்கம் கொண்டவர்களே பெரியாரின் பாதையில் செல்ல முடியும். அதனால் தான் பெரியார், திராவிடக் கழகத்தை முழுக்க முழுக்க சமூகசீர்திருத்த இயக்கமாக வைத்திருந்தாரே தவிர அதையொரு அரசியல் கட்சியாக ஆக்கவில்லை.

### இளைஞர் கடமை

சாதியொழிப்பு, மற்றும் சமூக சீர்திருத்தத்திலீடுபடுவோர் பெரியாரின் துணிவையும், நெஞ்சுரத்தையும், பதவி ஆசையற்ற மன நிலையையும் பெறவேண்டும். இலட்சியத்துக்காக உயிரை விடவும் தயாராக இருக்க வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் தேர்தலைப்பற்றிக் கவனியாது, இன்னும் 5000 ஆண்டுகளுக்கு இருக்கப் போகும் சமுதாயத்தைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இதுவரை திருமணம் செய்து கொள்ளாத இளைஞர்கள், திருமணம் செய்யும் போது, தமது சாதியை விட்டு வேறொரு சாதியிலேயே திருமணம் செய்து கொள்வதன் மூலம்சாதியை ஒழிக்க உறுதி கொள்ள வேண்டும்.

—இவ்வாறு வீரமணி பேசினார்.

## தமிழ் மன்னன் காசி

— உவர்மலை நந்திவிபாகன் —

காலினால் செந்தமிழ் மிதிபடும் நிலையினைக்
கண்டுமே கொதி கொண்டவன்.
காசியானந்தனே தமிழனை யெண்ணியே
கண்களும் நீர் கண்டவன்.
வேலியாய்த் தமிழரைச் சுற்றியே நிற்பவன்
வேதனை; துயர் தின்றவன்.
வேழமாய் யெத்தனை வெங்களம் நின்றவன்
வெஞ்சிறை பல கண்டவன்.
வாலிபம் முழுவதும் சிறையிலே போகவும்
வாழ்கவே தமிழென்பவன்.
வாழ்விலும், தாழ்விலும் வற்றாத கவிதைகள்
வழங்கிடும் தமிழ் மன்னவன்.
பாலியல் பற்றியும் பாடுவான்; பாடினும்
பாவிலே தமிழ் கொட்டுவான்
பாண்டிய மன்னனைப் போலவே தோன்றுவான்
பாசமோ டெமை யள்ளுவான்.

சி இ.ப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நில ஆக்கிரமிப்பை எதிர்த்து பிக்கு...

—1-ம் பக்கத் தொடர்

கணேஸ் (புத்த பிக்குவிடம்):- இது எங்கள் பூமி எங்கள் தொகுதி. தயவு செய்து இப்பூமியை விட்டு வெளியேறிவிடுங்கள்.

பிக்கு:- இது எங்களுக்குச் சொந்தமான பூமி; நாங்கள் இதைத்தருவதற்கு ஆயத்தமாக இல்லை; நீங்கள் எங்கே வேண்டுமென்றாலும் போங்கள்!

கணேஸ்:— நான் உன்னைப் போல பிக்குவாக மாற விரும்பவில்லை. புத்தனின் சமதர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நீ, இங்கு வந்து குடிசைகளுக்கு தீவைத்து அப்பாவித் தமிழ் மக்களை துப்பாக்கி முனையில் விரட்டுகிறாய்; இதுதானா புத்தனின் கொள்கை?

பிக்கு:— ஆம், இதுதான் புத்தனின் கொள்கை!

கணேஸ்:—அப்படியானால் நானும் பிக்குவாக இன்றிலிருந்து மாறிக்காட்டுகிறேன்.

இவ்வாறு கூறிய திரு. பூ. கணேசலிங்கம் பா.உ, உடனடியாக அங்கிருந்துதிரும்பி உகனை பொலிசிடம் புகார் செய்து விட்டு விடுதிரும்பினார்;

மறுநாள் அவசரத் தந்தி மூலம் பட்டிருப்புத்தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களையும் இளைஞர் பேரவை உறுப்பினர்களையும் தமது இல்லத்துக்கு அழைத்துஇதுபற்றிஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினார்.

28.9.78அன்றுஅவர்களில் 150க்கு மேற்பட்ட வீரர்களை உழவுஇயந்திரத்திலேற்றிக்கொண்டு தானே தலைமை தாங்கி 'கேவிளியாமடு' என்னும் ஆக்கிரமிப்புப்பகுதிக்கு சென்றார் திரு. பூ. கணேசலிங்கம். இவர்கள்வருவதைக் கண்ட ஆக்கிரமிப்பாளர்கள் தமது துப்பாக்கிகளையும் தூக்கிக்கொண்டுஅங்கிருந்து ஓட்டம் பிடித்தனர். ஒடிய இவர்கள் சிங்கள அரசாங்க அதிபர், அம்பாறைபொலிஸ் அதிபர் ஆகியோரையும் அழைத்துக் கொண்டு அந்த இடத்துக்கு வந்துசேர்ந்தார்கள்.

கேவிளியாமடுவில் தானும் சிலநாட்கள் தங்கியிருந்து தமிழ் இளைஞர்களை மறுபடியும் குடியமர்த்தும் நோக்கத்துடனேயே திரு. கணேசலிங்கம் அங்கு சென்றிருந்தார்.

அரசாங்கஅதிபரிடம்'கேவிளியாமடு' குடியேற்ற நிலம் தமிழர்களுக்கேயுரியது என்பதை தகுந்த சான்றுகளுடன் திரு. கணேசலிங்கம் விளக்கவே, அதைமறுக்கமுடியாத நிலையில், பௌத்தபிக்குவின் சார்பில் சமாதானம் பேசத்தொடங்கினார்சிங்கள அரசாங்க அதிபர். அதாவது— 75 ஏக்கரை பிக்குவும், அவரது ஆட்களும் எடுத்துக் கொள்ளட்டும் என்றும் மீதியை தமிழர்கள்எடுத்துக் கொள்ளட்டும் என்றும் கூறினார். வேறு வழியற்ற நிலையில் அதற்கு பௌத்தபிக்கு சம்மதித்தார்.

இதையடுத்து திரு. கணேசலிங்கம் ஆளுக்கு தலா இரண்டு ஏக்கர் வீதம்சுமார் 200 ஏக்கர் நிலத்தைதமிழர்களுக்கு தானே பிரித்து அளந்து கொடுத்துடன், உடனடியாகக் குடியேறி விவசாயத்தை செய்யும்படி தமிழ் இளைஞர்களை திரு. கணேசலிங்கம் வேண்டிக் கொண்டார்.

திரு. கணேசலிங்கத்தின் துணிவாலும், செயல்திறனாலும் நிலம் காப்பாற்றப்பட்டது குறித்து அவரை அனைவரும் பாராட்டுகிறார்கள்.

—தகவல்:: மதுரநாயகம்

## சர்வதே... சிறுவர் வார கருத்தரங்கு:

இடம்- த.வி.கூ. தலைமைப் பணியகம்

காலம்- 7-10-78 சனி மாலை 6-00மணி

தலைப்பு- "பெற்றார் விரும்பிய மொழியில் பாடபோதனை சிறுவர் சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறுதலே!"

யாழ் பெற்றார் சங்கத் தலைவர் பேசுகிறார். அனைவரும் வருக!


**செல்லமகால்** கடைசி வாரம்

ஜெமினி கணேசன், தேவிகா, முத்துராமன், ரங்கராவ் நடித்த -

**வாழ்க்கைப் படகு**

(புத்தம் புதிய கொப்பி)

**கெயிட்டி** [கொட்டாஞ்சேனை] 2-வது வாரம்

எம்.ஜி.ஆர். — அஞ்சலிதேவி எஸ். ஏ. நடராஜன் - நடித்த -

**மர்மயோகி**

(புதிய பிரதி)

**கிங்ஸ்லி** (கொழும்பு)

என். டி. ராமராவ், பி. கண்ணாம்பா, ராஜசுலோசனா, ரங்கராவ் நடித்த-

**ராஜ மகுடம்**

[புதிய பிரதி]

**விஜயா** (மாட்டுநகர்) கடைசி வாரம்

சிவாஜி நடித்த —

**உத்தமன்**

— கலர் —

**கெப்பிட்டல்**

மரிக்கார் ராமதாஸ், கெலன் குமாரி, சிவராம், ராஜகோபால் நடித்த-

**ஏமாளிகள்**

**லிடோ** (யாழ்நகர்)

முத்துராமன், ஜெயலலிதா — நடித்த —

**சூரியகாந்தி**

(புதிய கொப்பி)


இப்பத்திரிகை, சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1,978ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ...ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org